பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: மார்கழி 20 (4—1—68) வியாழன் ★ வெளியூர்: மார்கழி 21 (5—1—68) வெள்ளி [இதழ்: 169

வணக்கமும் நன்றியும்

சென்னை, சன. 4—

நேற்று கடற்கரையில் உலகத் தமிழ் மாநாட்டினைத் துவக்கி வைத்த குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள், தமிழில், 'வணக்கம்' என்றுகூறித் தம் உரையை ஆங்கிலத்தில் ஆற்றத் துவங்கினர்.

அதேபோல், பிரான்சு நாட்டைச் சேர்ந்த பன்னூட்டறிஞர் பேராசிரியர் பிலியோசா, ஆங்கிலத்தில் உரையாற்றிவிட்டு முடிக்கு முன், 'நன்றி' என்று தமிழில் கூறியதும் கூட்டத்தினர் ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

மொழி திணிக்கும் மோசக்காரருக்கோர் எச்சரிக்கை!

மொழி உணர்வின் கூர்மை காட்டும் சிறப்பான ஊர்வலம்!

சென்னை, சன. 4—

இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு—கருத்தரங்கையொட்டி, தமிழகமே நேற்று தலைநகரில் திரண்டிருந்தது!

கண்ணில் காணும் காட்சி யாவும் தமிழ்ப் பண்பின் மாட்சிக்குச் சாட்சியாய் அமைந்தன!

தீவுத் திடலில் மாநாட்டின் துவக்க நிகழ்ச்சியைச் சுட்டுவதே பகல் 2-30 மணியளவில் தொடங்கிய ஊர்வலத்தைக் கிட்டத்தட்ட இருபது இலட்சம் மக்கள் கண்டு களித்தனர்.

முன்னே நான்கு யானைகள் ஒன்றன்பின் ஒன்றாய் வர—தமிழ்ப் பண்பாட்டுச் சுரங்கத்தின் கருவகழ்ந்து தேர்ந்தெடுத்த எழிற் காட்சிகளைத் திறம்படச் சித்திரங்களாக்கிய அலங்கார ஊர்திகள் 27, பவனியில் வந்தன! ஒவ்வோர் ஊர்தியும் ஓர் அற்புதக் காட்சி!

முருகிற் சிறந்த ஊர்தி ஒவ்வொன்றும் காண்போர் மனத்தைத் திருடிச் சென்றன என்றே சொல்லலாம்!

கதறியழுத பசுகூட தன் நாவசைவால் ஆராய்ச்சி மணியடித்து நீதி கேட்ட தமிழ்ப் பண்பை—மன்னன் முன்னிலையிலும் அஞ்சாது நின்று வழக்குரைத்து நீதி கேட்ட கண்ணகியின் பெற்றியையும் கண்டு நீதிக்குத் தலை வணங்கிய தமிழகத்தின் பான்மை எண்ணி மனம் நெகிழ்ந்தார் குடியரசுத் தலைவர்!

புலவனைப் படுக்க வைத்துப் புரவலன்—புவிமன்னன் சிவிறி வீசும் காட்சி மெய்சிலிர்க்க வைத்தது அவ்வைக்கு அதியன் ஈந்த நெல்லிக் கனி—கோட்டைப் போர்—ஒவ்வொன்றும், ஒரு தனி முத்திரை;

ஒன்று இரண்டா—எழுதி முடிக்க! பார்த்தவர்களுக்கு மட்டுமே அதன் சிறப்புத் தெரியும்!

"இப்படிப் பழம் பெருமை மட்டுமே எண்ணிக்கிடக்காதீர்; ஆகவேண்டியன நிரம்ப உண்டு" என்று நம்மை நிலைக்குக் கொண்டுவரும் சீரணித் தோழர்கள், இடையிடையே வந்தனர்!

மொத்தத்தில் பொற்புடைப் பழந் தமிழகத்தின் பொலிவைக் காட்டி, புதுமை சமைக்கவேண்டிய தமிழரின் பொறுப்பைச் சுட்டுவதாய் அமைந்தது—இந்த அலங்கார ஊர்வலம்!

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழ் மாநாடு துவக்கம்

குடியரசுத் தலைவர் பங்கேற்ற சிறப்பு நிகழ்ச்சி

சென்னை, சன. 4—

உலகத் தமிழ் மாநாட்டினை, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன், நேற்று சென்னைக் கடற்கரையில் கூடியிருந்த பல நூறாயிரம் பேர்கள் அடங்கிய கூட்டத்தில் துவக்கிவைத்தார்.

தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் விழாவுக்குத் தலைமையேற்றார்கள்.

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகரின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா துவங்கியது.

கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விழாக் குழுச் சார்பிலும் செய்தித்துறையமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து தாய்க்குலத்தின் சார்பிலும் அனைவரையும் வரவேற்றனர்.

மலர்க் குழுச் சார்பில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பன்னாட்டறிஞரும் தமிழ் ஆராய்ச்சிக் கழகத் தலைவருமான பேராசிரியர் பிலியோசா, விழாக் குழுச் சார்பில் வரவேற்று உரையாற்றினார்.

அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவர் திரு. காமராசரும், வரவேற்றுச் சிறிது நேரம் பேசினார்.

அடுத்து உலகத் தமிழ்க் கருத்தரங்கு அழைக்குநர் திரு. ஆ. சுப்பையா, வாழ்த்துச் செய்திகளைப் படித்தார்.

இந்திரா காந்தி, மொரார்ஜி தேசாய், டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், மொரார்ஜி மலேசியக் கப்பூர் அமைச்சர்கள் முதலியோரிடமிருந்தும், மற்றும் பல்வேறு நாடுகளிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

அடுத்து, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், திருக்குறள் ஆராய்ச்சிக்கென, சென்னைப் பல்கலைக்கழகத்துக்கு மூன்று இலட்சம் ரூபாயை, துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்களிடம் அளித்து உரையாற்றினார்.

அதேபோல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்கு மூன்று இலட்சம் ரூபாயை, துணைவேந்தர் திரு. சந்திரா ரெட்டியிடம் வழங்கி உரையாற்றினார் — உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன்.

அதே ஆராய்ச்சிப் பணிக்காக மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரிடம், ரூபாய் மூன்று இலட்சத்தை, அமைச்சர் திரு. மா. முத்துசாமி வழங்கி உரையாற்றினார்.

மூன்று பல்கலைக் கழகங்களின் சார்பாகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் இராஜா சர் முத்தையா (செட்டியார்) நன்றி

உலக நாடுகள் மன்றத்தின் (ஐ. நா.) கல்வி—அறிவியல்—பண்பாட்டு அமைப்புத் தலைமை இயக்குநரான திரு. மா. ஆதிசேஷையா அழகுத் தமிழிலும், ஆங்கிலத்திலும் வாழ்த்துரை வழங்கினார்.

அடுத்து, இலங்கை உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. திருச்செல்வம் அவர்களும், தமிழிலும் ஆங்கிலத்திலும் வாழ்த்துரை வழங்கினார்.

மாநாட்டு மலரை தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் வெளியிட்டார்; அதனை குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் பெற்றுக்

பின்னர், திரு. ஜாகிர் உசேன் அவர்கள், தமிழ் மொழி—பண்பாடு—இலக்கியம்—வரலாறு ஆகியவை குறித்து விளக்கி ஆங்கிலத்தில் அரிய உரை வழங்கி, மாநாட்டைத் துவக்கிவைத்தார்.

இறுதியாக, முதலமைச்சர் அண்ணா அவர்கள் தலைமையுரையாற்றினார்கள்.

திரு. மு. ரா. பெருமாள் (முதலியார்) நன்றி நவில—நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது

விழாத் துவங்கியதும், சென்னை மாநகராட்சிமன்றத்தின் சார்பில் குடியரசுத் தலைவருக்கு வரவேற்பு

வித்தார்—மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் அவர்கள்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில், அரிய தமிழ்ப் பாடல் தொகுப்பு நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல் ஒன்றினை ஆதீனத்தின் தம்பிரான்; குடியரசுத் தலைவருக்கும், ஆளுநருக்கும், அண்ணா அவர்களுக்கும் வழங்கி, மூவருக்கும் பொன்னாடை போர்த்தினர்.

விழாத் துவங்குமுன் திருவிடைமருதூர் வீருசாமி பிள்ளையின் நாதசுர நிகழ்ச்சி நடைபெற்றது.

விழா முடிந்ததும், அறுபது நாதசுரக் கலைஞர்களின் நாதசுர விருந்தும், வாணவேடிக்கை

தமிழ் மாநாட்டுத் தொடக்க விழாவில் அறிஞர் அண்ணா முழக்கம்

தமிழ் மொழியை இழக்க ஒருபோதும் ஒப்போம்!

அனைத்துலகிற்கும் நன்னெறி காட்டிய நம் மொழி இந்திய அரியாசனத்தில் அமரும் காலம் வரும்

சென்னை, சன. 4—

"தமிழர்களாகிய நாங்கள் எந்த மொழியையும் மதிக்கிறோம்! உலகின் எந்தக் கோடியில் அறிவு இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்கிறோம்! உலகின் எந்தக் கோடியில் இருந்து வருபவர்களானாலும், அவர்களின் அறிவை நாங்கள் மதிக்கிறோம்.

"ஆனால் தமிழர்கள், தமக்கு என்று இருப்பதை இழக்க ஒருகாலும் சம்மதிக்க மாட்டார்கள்! 'அவர்களிடம் உள்ளது அருமையானது' என்று—அகில உலகில் உள்ளவர்களும் கூற இங்கு வந்து இருக்கிறார்கள்; அப்படி அவர்கள் சொல்லும்போது, 'தமிழர்கள் அதன்மேல் பற்றுக் கொள்ளமாட்டார்கள்' என்று எவரும் கருதமுடியாது!

"'எவ்வளவு அருமையான மொழி உங்களிடமிருக்கும் தமிழ் மொழி' என்று நார்வே நாட்டவரும், இங்கிலாந்து நாட்டவரும், அமெரிக்கரும், ஆஸ்திரேலியரும் இங்கு வந்து கூறும்போது, 'அந்த மொழிக்குச் சொந்தக்காரர்கள் நாம்' என்பதை எண்ணி மகிழ்கிறோம்!

"அந்த மொழிக்கு எந்தக் கட்டத்திலானாலும்—எந்த நோக்கத்திலானாலும்—எப்படிப்பட்டவரானாலும்—தகுந்த மரியாதை தர மறுத்தால், அதைத் தமிழினம் பொறுத்துக்கொள்ளாது! ஆழ்கடல் கொந்தளித்துக்கொண்டிருந்தால் அதை நாவாய் மூலம் கடக்கலாம். அதைப்போல தமிழர்களை அணைத்துச்சென்றால் அவர்கள் எல்லார்க்கும் தோழர்களாக இருப்பார்கள்.

"'தீதும், நன்றும் பிறர் தர வாரா' என்றும் பாடியுள்ளார்கள்; தீதாக இருந்தாலும், நல்லதாக இருந்தாலும், அது நாமாகத் தேடிக்கொள்வதே ஒழிய பிறர் தருவது அல்ல! எந்தத் தீதும் நாம் வேண்டாம் என்றால் வராது! இந்த நன்னெறி ஈராயிரம் ஆண்டுக்கு முன்பே தமிழருக்குக் காட்டப்பட்டுள்ளது!

"1967-ம் ஆண்டில் எல்லா நாடுகளையும் ஒன்றுபடச்செய்ய ஐ. நா. மன்றத்தில் பல நாட்டுக் கொடிகளையும் ஒருசேரப் பறக்கவிட்டு ஒற்றுமை பேசப்பட்டாலும், பேசிவிட்டு வெளியே வந்ததும், 'எந்த நாடு எந்த நாட்டின் மீது எப்போது படையெடுக்குமோ' என்ற அச்சம் ஏற்படுகிறது!

"ஆனால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று எடுத்துச் சொன்ன தமிழன் எவ்வளவு சிறந்த பண்பினைப் பெற்றிருந்தான் என்பதை எண்ணும்போது நெஞ்சம் விம்முகிறது!

"அத்தகைய தமிழ் மொழிபற்றி ஆராய்ச்சி செய்யப்படுகிறது. இந்த மாநாட்டுக் கருத்தரங்கு மூலம் அந்தத் தமிழ் மொழியின் சிறப்புக்களைப் பலரும் அறியச்செய்து, அதன் வளத்தையும் சிறப்பையும் கண்டு மற்றவர்களும் 'இதுவல்லவோ சிறந்த மொழி—இதுவல்லவோ நமது மொழி—இதுவல்லவோ இணைப்பு மொழி—இதுவல்லவோ ஆட்சி மொழி' என்று தமிழ் மொழியை விரும்பி எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் காலம் வரும் என்பதில், நான் மிகுந்த நம்பிக்கை வைத்து இருக்கிறேன்.

"இது, அவசரத்தால்—ஆத்திரத்தால் ஏற்படாது! தூண்டிலைப் போட்டபின் மீன் கொத்தும் வரை காத்து இருப்பதுபோல், காலக் கட்டம் வரும்வரை நாம் காத்திருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்! தமிழ் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளபடி காலமும் இடமும் பொருளும் அறிந்து செயல்பட வேண்டும்!

"நமது தமிழ் உரிய ஏற்றத்தைப் பெறும் சிறப்பை நாம் பெற்றதுபோலவே, இந்திய மக்களும் பெற்று அதை அரியாசனத்தில் அமர்த்தும் நன்னாளைப் பெறும் உறுதி கொள்வோம்! அதற்கான கருத்துக்களைத் தர இங்கு வந்த அறிஞர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் வாழ்த்தி வரவேற்போம்!"

தமிழகத்தில் புதிய திருப்பம்

இராச. மனோகரன் எம்.ஏ.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் ஒரு புதிய திருப்பத்தைத் தோற்றுவித்து ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிறது. அதன் திட்டங்களும் செயல் முறைகளும், சென்ற பொதுத் தேர்தல் வரை ஆளுங் கட்சியாக இருந்த காங்கிரசிலிருந்து பல்வேறு கோணங்களில் மாபெரும் மாற்றமுடையவையாக இருப்பதே இதற்குக் காரணம்.

இனி மீளமுடியுமா காங்கிரசு ?

நாடு விடுதலைபெற்ற பிறகு, எந்த ஒரு கட்சியாலும் அறைகூவல் விடுக்கப்பட முடியாத நிலையில் இருந்த காங்கிரசு, பொதுவாக நாடு முழுவதிலும் தேர்தலின் விளைவாகப் பெரிய அதிர்ச்சியைச் சந்தித்தது! தமிழகத்தில் அதற்கு அதிர்ச்சியல்ல—சமாளிக்க முடியாதபடி இடியே விழுந்தது! எதிர்க் கட்சிகளுக்கு 'மரண அடி' கொடுக்கப் போவதாகக் காங்கிரசுத் தலைவர் காமராஜ் தேர்தல் பிரசாரத்தின்போது கூறினர்; ஆனால் அவரது கட்சி வாங்கிக்கொண்ட மரண அடியிலிருந்து அது இன்னும் மீள முடியவில்லை! ஏன்—'மீள முடியாமலே போய்விடலாம்' என்றுதான் அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்!

அரிய சாதனையின் முழு உரிமை யாருக்கு ?

மற்ற மாநிலங்களில் எதிர்க் கட்சிகள் காங்கிரசை எதிர்த்ததற்கும்—தமிழகத்தில் எதிர்க் கட்சிகள் காங்கிரசை எதிர்த்ததற்கும் ஓர் அடிப்படை வேறுபாடு உண்டு. அங்கே பிரிந்து எதிர்த்தன—இங்கே சேர்ந்து எதிர்த்தன! 'கொள்கையற்ற கூட்டணி' என்று காங்கிரசுத் தரப்பில் வசை கூறிப் பார்த்தனர். ஆனால் உண்மையில், காங்கிரசை எதிர்ப்பதில் மக்களின் எதிர்ப்புச் சக்தியைச் சிதறடிக்காமல்—அதே நேரத்தில் தத்தம் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் தமிழகத்தில் எதிர்க் கட்சிகள் தேர்தலில் கலந்துகொண்டன; இதனால், கொள்கையை விட்டுக் கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லாமல் போயிற்று! இந்த அரிய சாதனையின் முழு உரிமையும் அறிஞர் அண்ணா அவர்களுக்கு உரியதாகும்!

இப்படிக் கொள்கை வழி கூட்டணியுடன் தனியொரு பெரும்பான்மை கட்சியாக முகிழ்த்த தி. மு. கழகம், மக்களின் நல்லாசியுடன் ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்டது. 'மக்கள்தான் மக்களாட்சிக்கு உயிர்' என்பதைப் புதிய அரசு ஒவ்வொரு செயலிலும் காட்டத் தவறவில்லை! இது, தமிழகம் இதுவரை கண்டிராத திருப்பமாகும்!

மக்களையே கேட்கும் புதுமை பூத்தது!

'ஓட்டுப் போட்டுவிட்டு வீட்டுக்குப் போங்க; நான் பார்த்துக்கறேன்' என்று சொன்ன தலைவர்கள் காங்கிரசில் உண்டு என்றால், தி. மு. க.-வின் பெருந் தலைவரோ, எந்தப் பிரச்சினையையும் ஒளிவு மறைவு இன்றி மக்கள்முன் வைத்து, அவர்களது கருத்தறிந்து செயல்படுவதில் அக்கறை காட்டலானார்.

'எல்லாம் எங்களுக்குத் தெரியும்' என்று ஆட்சியாளர்கள் நினைத்த நிலை மாறி, 'எங்களுக்கு வழி காட்டுங்கள்' என்று மக்களை அணுகிக் கேட்கும் ஒரு புதுமை பூத்தது!

மக்கள் ஆட்சியில் சொந்தம் கொண்டாடி, 'நம்முடைய பிரதிநிதிகள்தான் நம்மை ஆள்கிறார்கள்' என்ற பூரிப்போடு உணர்ந்து, அரசுடன் ஒவ்வொரு கட்டத்திலும் மனப்பூர்வமாக ஒத்துழைக்கும் காட்சியையும் இன்று பார்க்கிறோம்.

செயலாற்றத் தவறியதா கழக ஆட்சி ?

கழகம் தமிழைத் தன் உயிர் மூச்சாகக் கொண்டு—தமிழுக்கு இந்தியால் தீங்கு நேரும் என்ற நிலை ஏற்பட்டபோதெல்லாம் துடித்தெழுந்து—தியாகத் தழும்புகளை ஏற்கத் தவறியதில்லை!

தமிழை யார் நன்றாகப் பேசினாலும், சிறப்பாக எழுதினாலும், 'அவர், கழகத்தவர்' என்று காங்கிரசுத் தரப்பிலேகூடக் கருதப்படுவதுண்டு; எனவே, கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற அந்தக் கணமே, அருந்தமிழ் வளர்ச்சிக்கு ஆர்வத்துடன் செயலாற்றத் தொடங்கியதில் வியப்பில்லை!

தலைமைச் செயலகத்தில் தமிழில் பெயர்ப் பலகை! பேருந்து வண்டிகளில் தமிழ்ப் பெயரோடு தமிழ் மறை தந்த திருவள்ளுவப் பெருந்தகையின் உருவத்தையும் உள்ளத்தையும் காட்டும் வகையில் அவரது உருவப்படமும், குறளும், தமிழ் மக்களைக் களிப்புக் கடலில் ஆழ்த்தின; 'சத்தியமேவ ஜெயதே' என்ற அரசு இலட்சியத்தை, 'வாய்மையே வெல்லும்' என்று அழகு தமிழில் பொறித்தனர்.

இவையெல்லாம், 'சாதாரணச் செயல்கள்' என்று காங்கிரசார் ஒதுக்கப் பார்த்தாலும், உண்மையில் இவற்றால் தமிழர்களிடையே ஏற்பட்ட புத்துணர்ச்சிக்கும் எழுச்சிக்கும் அளவில்லை என்பதை மக்களை உற்றுப் பார்க்கும் யாரும் எளிதில் கண்டுகொள்ளலாம்.

தியாகச் செம்மல்கள் இடர் நீங்கிற்று!

1965-ல் இந்தி மொழிக்கு எதிராகத் தமிழகமெங்கும் கொழுந்து விட்டெரிந்த எதிர்ப்புத் தீயில் தமிழ் மறவர்கள் எண்ணற்றவர்கள் ஈடுபட்டுத் தியாகங்கள் பல புரிந்தனர்! அவர்களுள் உயிர்ப் பலியானோர் போக, பலர் வெஞ்சிறையில் தள்ளப்பட்டு—அவர்களுக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்தன.

'தாய்மொழி வாழவேண்டும் என்பதற்காகத் தங்கள் உணர்ச்சியை அழுத்திவைக்காமல் வெளிக் காட்டிய குற்றத்திற்காக இப்படிப் பட்டவர்கள் பழிவாங்கப்பட வேண்டுமா ?' என்ற பரிவுணர்வு தமிழ் மக்களிடையே இருந்துவந்தது; மக்களின் உள்ளக்கிடக்கையை அறிந்து செயல்படுவதில் வல்லதான தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதும் முதல் வேலையாக இந்த வழக்குகளைத் திரும்பப் பெற்றதோடு, தியாகச் செம்மல்களை விடுதலை செய்யவும் உத்தரவிட்டது!

சொல்லில்—செயலில் மெய்ப்பித்தனர்!

மக்கள் வரிப் பணத்தைச் செலவு செய்வதில் கழக ஆட்சி தனக்கு விதித்துக்கொண்ட கட்டுப்பாடும், ஒழுங்கு முறையும் போற்றத்தக்கவை. காந்தியடிகள் சுதந்தரப் போராட்டக் காலத்தில் காங்கிரசுக்கு எதை உபதேசித்தாரோ, அதை இன்று கழகம் பின்பற்றி நடக்கும்படிச் செய்துவிட்டார் அறிஞர் அண்ணா!

மக்களிலிருந்து வரும் மக்கள் பிரதிநிதிகள், மக்களுக்குத் தொண்டாற்றக் கிடைத்த ஒரு வாய்ப்பாகத்தான் பதவியைக் கருதவேண்டுமே தவிர, 'உல்லாசம் அனுபவிப்பதற்கான ஏணிப் படி என்று எண்ணக்கூடாது' என்பதை அவர் சொல்லிலும் செயலிலும் நிலைநாட்டினார்!

காங்கிரசு அமைச்சர்கள், படாடோபமான கார்களில் பவனி வந்தனர்! 'பணியாற்றுவதற்குச் சிறிய கார்களே போதும்' என்று சொல்லிவிட்டனர் கழக அமைச்சர்கள்! அதிலும், சொந்தக் கார் உள்ளவர்கள் அரசாங்கக் காரைப் பெற்றுக் கொள்ளவில்லை!

அரசாங்கப் பணத்தில் கட்சிப் பிரச்சாரம் செய்வதை இவர்கள் அறவே நீக்கிவிட்டனர்! இது, முந்திய காங்கிரசு அமைச்சர்கள் கையாளாத ஒரு பண்பாகும்!

காங்கிரசு அமைச்சர்கள் மாதம் ரூ. 1,000 சம்பளம் பெற்றுக்கொண்டனர்; ஆனால் கழக அமைச்சர்கள் அதைப் பாதியாகக் குறைத்துக் கொண்டனர்!

மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்யும்போது அதிகாரிகள் புடைசூழ வருவதைப் பெருமையாகக் கருதிப் பூரித்துவந்தனர் காங்கிரசு அமைச்சர்கள்; ஆனால் இவர்கள், 'அன்றாட அலுவலுக்கு ஊறு ஏற்படும் வகையில் அமைச்சர்களுக்குப் பின்னால் அதிகாரிகள் வரத் தேவையில்லை' என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டனர்!

அது மட்டுமல்லாமல், தனிப்பட்ட முதலாளிகள் கொடுக்கும் விருந்துகளில் கலந்துகொள்ளாமலும் தனிப்பட்டோர் இல்லங்களில் தங்காமலும் தங்களது பதவிக்குரிய தன்மையைப் பாதுகாத்துக்கொள்வதில் விழிப்பாய் இருக்கின்றனர்!

தி. மு. க. அரசின் தனித்தன்மை

எதிலும் நிதானப் போக்கும், அறிவாளிகள்—அனுபவம் நிறைந்தோர்—நிர்வாகிகள்—அரசியல் கடசியினர் ஆகிய அனைத்துத் தரப்பினர் கருத்துக்களைக் கேட்டறிந்து யோசித்துச் செயல்படும் பாண்மையும் தி. மு. க. அரசின் தனித் தன்மைகளாகும்.

நிர்வாகச் செலவில் சிக்கனத்தையும், அதே நேரத்தில் நிர்வாகச் சீர்மையையும் பாதுகாத்து வருகின்றனர்!

இந்தியாவிலேயே புரட்சிகர சாதனை

சென்னை நகரில் சமூக விரோதிகளின் சதிச் செயலால் தீ விபத்துக்கள் ஏற்பட்டு, குடிசைவாழ் மக்கள் வீடிழந்து அல்லற்பட்டபோது, கழக அரசு அவர்களது உதவிக்கு விரைந்தது; 'அரசு அளித்திடும் எந்த உதவியும் நிரந்தரமானதாக இருந்திட வேண்டும்' என்பதில் முதல்வர் கொண்ட அக்கறை காரணமாக, தீப் பிடிக்காத வீடுகள் அவர்களுக்குக் கட்டித் தரப்பட்டும் வருகின்றன. இதுவும், அரசாங்கச் செலவின்றிப் பொதுமக்களிடமிருந்து நன்கொடை பெற்று நிறைவேற்றப்படுவது, இந்தியாவிலேயே ஒரு புரட்சிகரமான சாதனை என்று சொல்லவேண்டும். இதுவரை ரூ 33 இலட்சத்திற்கும் அதிகமான தொகையை பொதுமக்கள் நன்கொடையாக வழங்கியுள்ளனர். ஏழைகளுக்கு ஏறத்தாழ ஆயிரம் வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

சமூக நலனில் தி. மு. கழகம் கொண்டுள்ள உண்மையான ஈடுபாடும், அக்கறையும் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் காண முடியாத பண்புகளாகும்.

காற்றில் பறக்கவிட்டனர் காங்கிரசார்—தீவிரப்படுத்துகின்றனர் கழகத்தினர்!

காந்தியடிகள் காங்கிரசுக்கு நிர்மாணத் திட்டங்களுள் ஒன்றாக அளித்த மதுவிலக்குக் கொள்கையை, காங்கிரசு மாநிலங்களே காற்றில் பறக்க விட்டுவிட்டன! திட்டங்களை நிறைவேற்றப் பணத்திற்குத் தவிக்கும் இந்த நேரத்தில் கள்ளுக்கடைகளைத் திறப்பதால் கிடைக்கக்கூடிய சில கோடி ரூபாய்க்காக அவை இப்படிச் செய்தபோதிலும், கழக அரசு கொள்கை நோக்கோடும், சமுதாயக் கண்ணோட்டத்தோடும் செயல்பட்டு, மதுவிலக்கை எக்காரணத்தைக் கொண்டும் தளர்த்துவதில்லை என்றும், மாறாக தீவிரப்படுத்துவதென்றும் தீர்மானித்தது.

சாதி பேதமற்ற சமுதாயத்திற்கு வித்து

சமூகத்தில் பன்னெடுங்காலமாக பிற்பட்ட நிலையில் உள்ள மக்களின் முன்னேற்றத்திற்கு உதவுவதோடு, சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டியதன் அவசியத்தையும் தி. மு. க. அரசு மறந்துவிடவில்லை! தமிழகத்தில் கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் மணமக்களுக்குப் பொற் பதக்கம் அளித்துப் பாராட்டுவதென கழக அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு முன்னால் அரசியலார் இதுபோன்ற முயற்சிகளில் ஈடுபட்டதில்லை.

வளர்ந்துவரும் சமுதாயத்தில் காலத்தை ஒட்டி மாறுதல்கள் ஏற்பட்டே தீரும். இந்த மாறுதல்களுக்காகப் பாடுபடும் புரட்சியாளர்கள், சமுதாயத்தின் சிந்தனையைத் தூண்டிவிடுகின்றனர். தமிழகத்தில் பெரியார் ஆரம்பித்துவைத்த சீர்திருத்தத் திருமண முறை அவராலும், அறிஞர் அண்ணா—அவர்தம் கழகத்தவர் ஆகியோராலும் பின்பற்றப்பட்டு, நாட்டில் ஆயிரக்கணக்கான சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்த மணமக்களுக்குப் பிறந்த குழந்தைகள்கூட பெரியவர்களாகி அவர்களும் சீர்திருத்தத் திருமணம் செய்துகொண்டுள்ளனர். இந்த நிலையில், சீர்திருத்தத் திருமணங்களுக்குச் சட்டப் பாதுகாப்பு அளிக்கும் நியாயமான—பொறுப்புமிக்க கடமை அரசுக்கு உண்டு. இதனைத் தி.மு.க. எதிர்க் கட்சி வரிசையில் இருந்து உணர்த்தியபோது, அதிகார மமதையில் இருந்த காங்கிரசு செவி சாய்க்கவில்லை! இப்போது ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்ட கழகம், அனைத்துக் கட்சிகளின் ஒருமனதான ஒத்துழைப்பைப் பெற்று, 'சுயமரியாதைத் திருமணத்தை'ச் செல்லுபடியாக்கச் சட்டமியற்றியுள்ளதை நல்லறிவாளர்கள் பாராட்டுகின்றனர்.

கண்ணுங் கருத்துமாகச் செயல்படுகிறது!

பஞ்சாயத்து ஆட்சியின்கீழ், பயனற்ற பணிகளுக்குப் பணம் பாழாவதைத் தவிர்க்க விரும்பிய கழகம், பஞ்சாயத்து ஆட்சியைச் சீர்திருத்தி அமைக்கக் கருதியது; இதற்காகத் தனி ஆலோசகரை நியமித்து, அவரது ஆய்வறிக்கையைப் பெற்றதோடு, அதுபற்றி அனைத்துக் கட்சியினரது கருத்துக்களையும் கேட்டறிந்தது; இதன் பயனாக, 'நல்ல பஞ்சாயத்து நிர்வாகம் கிராமங்களின் வளர்ச்சிக்கு வழிகோலும்' என உறுதியாக நம்பலாம்.

காவல் துறையினர் பொது நலனைக் காப்பவர்களாகவும், சட்ட உணர்வோடு நடந்துகொள்ளும் குடிமக்களின் பாதுகாவலர்களாகவும், அதே நேரத்தில் தீய சக்திகளை ஒடுக்குவதில் உறுதியானவர்களாகவும் இருக்கவேண்டும் என்பதில் கழக அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

கழக அரசு மெய்ப்பிக்கிறது!

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது தமிழ்நாடெங்கும் உணர்ச்சி கொழுந்து விட்டெரிந்து, தீரமிக்க நல்லிளைஞர்கள் பலர் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகவும், எங்கும் பீதி மக்களை அலைக்கழிக்கவுமான நிலைமை இருந்தது; காவல் துறையினருக்குத் துணையாக இராணுவமும் அழைக்கப்பட்டது; 'துப்பாக்கிப் பிரயோகம் பற்றி நீதி விசாரணை வேண்டும்' என நடுநிலையாளர் வேண்டுகோள் விடுத்தனர்; ஆனால் அன்றைய அரசு முரட்டுப் பிடிவாதத்துடன் மறுத்துவிட்டது!

இன்றையக் கழக அரசோ, 'வேட்டைக்காரன்புதூரில் விவசாயி ஒருவர் அரசாங்க அதிகாரிகளால் துன்புறுத்தப்பட்டார்' என்று குற்றச்சாட்டு காங்கிரசுத் தரப்பிலிருந்து எழுப்பப்பட்டபோது, 'ஒரு சாதாரண சம்பவம்தானே' என்று அலட்சியம் செய்யாமல், அதை விசாரிப்பதற்காக ஐ.சி.எஸ். அதிகாரி ஒருவரை நியமித்தது.

கழக எம்.எல்.ஏ. ஒருவர் தொழிற்சாலை ஒன்றில்—தொழில் தகராறு காரணமாக—அத்துமீறி நுழைந்தார் என்பதற்காக, அவரைக் கழக எம்.எல்.ஏ. என்றும் பாராது காவல்துறையினர் கைது செய்தனர். இந்த இரண்டு நிகழ்ச்சிகளும், 'பொதுமக்களுக்கு நிர்வாக அதிகாரிகளால் இம்மியும் இன்னல் ஏற்படக்கூடாது' என்பதிலும், 'காவல் துறையினர் பாரபட்சமின்றி மக்களுக்குப் பணியாற்ற வேண்டும்' என்பதிலும் கழக அரசு உறுதியாக இருப்பதை மெய்ப்பிக்கின்றன!

மக்களுக்கு நன்மை செய்வதில் இணையற்ற ஆர்வம்

இருபதாண்டுக்காலக் காங்கிரசின் அலங்கோல ஆட்சி காரணமாக, தமிழக அரசின் வரவு - செலவுத் திட்டம் இன்னும் துண்டுவிழும் நிலையிலேயே இருக்கிறது. இனிமேல்தான் கழக ஆட்சியின் சாதனையைப் புரிந்துகொள்ளக்கூடிய வரவு-செலவுத் திட்டங்கள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

கழகம் பொறுப்பு ஏற்றுக்கொண்டவுடன், இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை மார்ச்சிலும், நடப்பு ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை ஜுன் மாதத்திலும் சட்டப் பேரவைமுன் வைத்தது. கழக ஆட்சியாளரின் நோக்கமும், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதில் அவர்கள் கொண்டுள்ள இணையற்ற ஆர்வமும் ஜுன் வரவு-செலவுத் திட்டத்தில் தெள்ளத் தெளிய விளங்கின.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்கு மட்டும் ரூ. 54 கோடி ஒதுக்கப்பட்டது; இது, மொத்த வருமானத்தில் கால்பங்கு; சென்ற ஆண்டைவிட பத்து கோடி ரூபாய் அதிகம். மக்களின் வாழ்க்கையைச் சீர்திருத்தி அமைப்பதில் கல்விக்குள்ள முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்புரிவதே இதற்குக் காரணம்.

மேலும், பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 1,500-க்குக் குறைவாக உள்ள மாணவர் அனைவருக்கும் புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி அளித்தது. அத்துடன், அரிசனங்கள்—பழங்குடியினர்—பின்தங்கிய வகுப்பினர் ஆகிய பிரிவு மாணவர்களுக்குக் கல்லூரி சம்பளத்திலிருந்து விலக்கு அளிக்கும் வருமான வரம்பு தற்போது ஆண்டொன்றுக்கு ரூ. 1,500 என்றிருப்பதை, 2,000-ஆக உயர்த்தியிருக்கிறது.

என்.ஜி.ஓ.-க்களின் பிள்ளைகளுக்கும், மாதச் சம்பளம் ரூ. 400-க்குக் குறைவாக உள்ள ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கும் புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி அளித்தது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

கட்சிகளை மறந்து உரிமைக்கு போராடுவோம்!

ஒரு தமிழ்க் குடிமகனின் உணர்ச்சிக் குரல்!

"காங்கிரசுக் கட்சியினால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள மொழித் திருத்த மசோதா செயல்படுத்தப்படுமானால், நாட்டின் அழிவும் பிரிவினையும்தான் அதன் விளைவுகளாகப் போகின்றன!

"ஐரோப்பா கண்டத்திற்கு இணையான பரப்பளவு கொண்ட இந்தியா போன்ற இவ்வளவு பெரிய நாட்டில், 32 சதவிகித மக்கள் பேசும் ஒரு மொழியை, ஏனைய 68 சதவிகிதம் பேர்மீது சுமத்த முயற்சி செய்யப்படுகிறது.

"சுவிட்சர்லாந்து நாட்டில் 72 சதவிகித மக்கள் ஜெர்மன் மொழியைப் பேசுகின்றனர்; அப்படியிருந்தும், அங்கே அது இணைப்பு மொழியாக இல்லை; அங்குள்ள ஏனைய 28 சதவிகித மக்கள் பேசும் பிரெஞ்சு — இத்தாலிய — ரோமானிய மொழிகளுக்குத் தரப்பட்டுள்ளதைப் போன்ற இடமே அதற்கும் தரப்பட்டுள்ளது.

"இந்திய மொழிகள் அனைத்திற்கும் சமமான தகுதி கிடைக்கும், நாமனைவரும் கட்சிப் பற்றுகளையெல்லாம் மறந்து, கடைசிவரை போராடுவோம் என்று உறுதி எடுத்துக்கொள்வோமாக"

என்று, சென்னையைச் சேர்ந்த ஏ. இராமச்சந்திரன் என்பவர், 'டெக்கான் ஹெரால்டு' நாளேட்டில் எழுதியுள்ளார்.

மொழி மசோதா

மறு பரிசீலனை கிடையாதாம்

தலைமையமைச்சர் கூறுகிறார்

"மொழி மசோதாபற்றி மறு பரிசீலனை செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை; இத்தகைய மறு பரிசீலனை, மேலும் சிக்கல்களை ஏற்படுத்தும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா, உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ரே பரெய்லியில், செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

இந்தி பேசுவோர் எண்ணத்திற்கு ஏற்ப....!

"இந்தி பேசுவோர் மாநிலங்களுக்குச் சிறிது அச்சம் இருந்தது; அவர்களுடைய எண்ணத்திற்கு ஏற்பவே மொழி மசோதாவில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன"

என்று, கேள்வி ஒன்று குப் பதிலளிக்கையில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

செய்திக்கு மறுப்பு

கடந்த ஐந்தாண்டுகளாக உடுமலை நகரில், 'நகரசுத்தித் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்' நல்லமுறையில் செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

இதைக காணப் பொறுக்காத சிலர், தீய எண்ணத்தோடு கடந்த 11—12—67, 12—12—67 பத்திரிகைகளில், 'உடுமலை நகரசுத்தித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததாக'ச் செய்தி வெளியிட்டிருந்தனர்.

அது உண்மைக்குப் புறம்பாகது; அப்படி ஒரு நிகழ்ச்சி நடக்கவுமில்லை; அப்படிப்பட்ட தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை.

"மாற்றுச் சங்கத்தினர் இவ்வாறு செய்தி வெளியிட்டதை பொதுமக்கள் நம்பவேண்டாம்" என்று, மேற்படி சங்கச் செயலாளர் மா. சேரன் அறிவிக்கிறார்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தாங்க இயலாதவர்களுக்கு வரி விலக்கு

கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பிருந்து சமுதாயத்தில் தாங்கக் கூடியவர்கள்மீது வரி விதித்து தாங்க இயலாதவர்களுக்கு உதவ வேண்டுமென வற்புறுத்தி வந்தது. இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையிலேயே வரவு-செலவுத் திட்டம் அமைந்ததை அனைவரும் பாராட்டினர்.

ஆடம்பரப் பொருள்களுக்கும், அயல்நாட்டு மது வகைகளுக்கும் அரசு வரியை அதிகரித்தது; அதே நேரத்தில், நெசவாளர்களுக்கு ஆறுதல் அளிக்கின்ற வகையில் பருத்தி, பருத்தி நூல் மீதான வரி விதத்தை உயர்த்தவில்லை!

காப்பி, தேயிலை, சோப்பு, மண்ணெண்ணெய், இரசாயன உரங்கள் ஆகியவற்றின் மீதான வரிகளையும் உயர்த்தவில்லை!

மாநிலத்திலுள்ள புன்செய் நிலங்கள் யாவற்றுக்கும் அடிப்படை வரியை நீக்கியது; இதனால், ஒரு கோடியே நாற்பது இலட்சம் ஏக்கர் நிலங்களுக்கு வரி விலக்குக் கிட்டியது; இதனால், உழவர் பெருமக்களில் மிகப் பெரும் பகுதியினர் பயனடைகின்றனர்!

திட்டங்களை வகுப்பதில் புதிய திருப்பம்

திட்டங்களை வகுப்பதிலும், செயல்படுத்துவதிலும் ஒரு புதிய திருப்பத்தை கழக அரசு அளித்துள்ளது. திட்டங்கள் கீழ்மட்டத்திலிருந்து உருவாக்கப்படவும், விரைவில் பலனளிக்கும் திட்டங்களை முதலில் மேற்கொள்ளவும், உணவுப் பெருக்கத்திற்கான திட்டங்களுக்கு முதலிடம் அளிக்கவும் அரசு முனைந்து செயல்பட்டு வருகிறது.

மாநிலத் திட்டக் குழு ஒன்று அமைக்கவும், அதில் வல்லுநர்களைச் சேர்த்து, அவர்களது உயரிய கருத்துக்களைக் கேட்டுத் திட்டங்களை வகுக்கவும் முயலுகிறது.

பெருமைக்குரிய திட்டம் நிறைவேறுகிறது!

மக்களின் வாங்கும் சக்திக்குமேல் விலைகள் உயர்ந்து வருவதைக் கழகம் தொடக்கத்திலிருந்தே எடுத்துக்காட்டி வந்தது. பொறுப்பேற்றதும், ஏழைகளுக்கு உணவுப் பொருள் மலிவாகக் கிடைக்கச் சென்னையிலும், கோவையிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கும் திட்டத்தை முதற் கட்டமாக மே 15 முதல் அமுலாக்கியது.

ஏழைகளின் வயிற்றில் பால் வார்க்கும் இப்புனிதத் திட்டம் ஆகஸ்டு 15 முதல் சென்னையை அடுத்துள்ள புறநகர்ப் பகுதிகளுக்கும் விரிவாக்கப்பட்டது; இதனால் மொத்தம் 37 இலட்சம் மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

பொங்கல் புதுநாளிலிருந்து குடும்பக் கார்டு உள்ள பகுதிகள் அனைத்திற்கும் ப்டி அரிசி வழங்க எண்ணியுள்ளது. 'அரிசி விலை குறைந்தால், அகவிலையும் குறையும்' என்ற அடிப்படையிலேயே முதல்வர் இத்திட்டத்தை நிறைவேற்றுகிறார்.

பாமர மக்கள் மட்டுமன்றி, டாக்டர் பா. நடராசன் போன்ற பொருளாதார நிபுணர்களும், திரு. செகசீவன்ராம் போன்ற மக்கள் தலைவர்களும் இந்தத் திட்டத்தைப் பாராட்டி வரவேற்றிருப்பதே அதன் பெருமைக்குப் போதிய சான்றாகும்.

தமிழகத்தில் தொழில் தழைக்கவும், சேலம் உருக்காலை—தூத்துக்குடித் துறைமுகம் போன்ற பெருந் திட்டங்கள் நிறைவேற்றப்பட

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)



1½ டன் எடை சாமான் ஏற்றும் பார்கோ D-300

சிறிய வண்டிகளிலே பெரிது; பெரிய வண்டிகளின் உழைப்பு. சுருங்கச் சொன்னால் நடுத்தரமான நல்ல வண்டி பார்கோ D-300. அதிகச் சாமான்களை ஏற்றிச் செல்ல அடக்கமான வண்டி பார்கோ D-300. சாலைகளிலே சங்கடமில்லாமல் ஓட்டவும் போக்கு வரத்து நெரிசலைச் சுலபமாகச் சமாளிக்கவும் பொருத்தமான வண்டி பார்கோ D-300. பிக் அப்-வான், டெலிவரி வான், ஸ்டேஷன் வாகன், ஆம்புலன்ஸ் ஆகிய எந்த விதத்திலும் உபயோகிக்கலாம். நகரத்திலும் அதன் சுற்றுப்புரங்களிலும் ஆட்களையும் சாமான்களையும் குறைந்த செலவில் ஏற்றிச் செல்ல, இணையற்ற வண்டி பார்கோ D-300

சக்தி மிக்க 28.35 H.P. பெட்ரோல் என்ஜின் • 3,112 மீ.மீ. (123'') WB அல்லது 3,336 மிமி (133'') WB ஆகிய இரண்டில் விருப்பமானதைத் தேர்ந்தெடுக்கலாம் • சுலபமாகவும் விரைவிலும் ரிப்பேர் செய்ய பானெட் திறப்பு வசதி.

• (பிரிமியர் ஆட்டோமோபைல்ஸ் தயாரிப்பு)

தவணை ஏற்பாடு

சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட் மூலம் சுலபமான மாதத் தவணைகளில் வாங்கலாம்.



TVS

முழு விவரங்களுக்கு அன்பு கூர்ந்து அணுகுக:

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் மதுரை • திருச்சி • திருநெல்வேலி • புதுக்கோட்டை • சேலம் • கோயமுத்தூர் • திருவனந்தபுரம். சப் டீலர்கள்: P. N. கிருஷ்ண அய்யர் & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சூர் • C. C. ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட், கள்ளிக்கோட்டை • தி குயிலோன் ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட், கொல்லம் • மனோரஞ்சன் காங்கூலி & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், புதுச்சேரி.

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் மதராஸ் • பங்களூர் • செகந்திராபாத் (A.P.) சப்டீலர்கள்; காரபதி காராஜ் 1959, விஜயவாடா • ஸ்ரீ பட்டாபிராம் கமர்ஷியல் சிண்டிகேட், காக்கிநாடா, விசாகப்பட்டிணம் • D. S. ஆட்டோமோபைல்ஸ், நெல்லூர் • தி மோட்டார் சேல்ஸ் கம்பெனி, அனந்தப்பூர் கர்நூல் • T. N. ரகுநாத ரெட்டி, கடப்பை • ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோமோபைல்ஸ், ஹோஸ்பேட் • P. V. பய் & கம்பெனி மங்களூர், மெர்க்காரா

ci-4272